# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2018 யூலை

## (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

---

இவ்வினாப்பத்திரம் A, B, C, D எனும் 4 பகுதிகளில் 10 கட்டாய வினாக்களைக் கொண்டிருக்கிறது.

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

### வினா இல. 01

வினா இல. 1 ஆனது பத்து (10) கட்டாய வினாக்களை உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் 2 புள்ளிகள் வீதம் மொத்தமாக 20 புள்ளிகள் இவ்வினாவுக்குரியதாகும்.

இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு, மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை மாத்திரம் விடைப்புத்தகத்தில் எழுதுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இவ்வகையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது நேர முகாமைத்துவத்தைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். அவர்கள் வினாக்களுக்கு விடையளிப்பதற்கான அறிவுறுத்தல் களைக் கவனமாகப் பின்பற்றுதல் வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றி விடையளித்திருந்தனராயினும் சிலர் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமையும் அவதானிக்கப்பட்டது.

வினாவுக்கு ஒதுக்கப்பட்ட இலக்கத்தை மாத்திரம் விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கூறப்பட்டிருந்த போதிலும் பரீட்சார்த்திகள் உரிய விடையினை வினாப்பத்திரத்திலேயே குறித்திருந்த சந்தர்ப்பங் களும் காணப்பட்டன. சில பரீட்சார்த்திகள் புள்ளிகளை இலகுவாகப் பெறக்கூடிய இவ்வினாவின் சில உப வினாக்களுக்கு விடையளிக்க முயற்சித்திருக்கவில்லை.

**1.2** குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வேலையில் மனித நடத்தைப் பகுதியினை விபரிக்கின்ற முகாமைத்துவக் கோட்பாட்டினை அடையாளங் காணத் தவறியிருந்தனர். இந்த வினாவுக்கான சரியான விடை இல. (2) இல் வழங்கப்பட்ட நடத்தைசார் கோட்பாடு என்பதாகும்.

**1.4** இவ்வினாவுக்கு விடையளிக்கும்போது, அதில் கேட்கப்பட்ட வரையறை ஒன்றாக அமையாதது என்பதை வரையறை ஒன்றாக அமையக்கூடியது எனத் தவறாக விளங்கிக்கொண்டதன் விளைவாக பல பிழையான விடைகள் அளிக்கப்பட்டிருந்தன. இப்பகுதிக்கான சரியான விடை இல. (3) இல் வழங்கப்பட்ட ஊழியர்களிடமிருந்தான ஏற்பனவு என்பதாகும்.

இல. **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியானதா அல்லது தவறானதா என்பதைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவற்றுக்கு நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் வினாக்கள் தொடர்பில் போதிய அறிவைக் கொண்டிருக்காமை அல்லது பரீட்சைக்குச் சரியானவாறு தயார்படுத்தாமையால் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட அறிவுறுத்தல்களில் தமது கவனத்தைச் செலுத்தாது ‘‘சரியானது’’ அல்லது ‘‘தவறானது’’ என எழுதுவதற்குப் பதிலாக (✓), (X) எனும் குறியீடுகளைப் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இந்த வகையான குறைபாடுகளைத் தடுப்பதற்கு, பரீட்சார்த்திகள் ஒழுங்குமுறையாக அறிவுறுத்தல்களைப் அவ்வாறே பின்பற்றுவது அவசியமானதாகும்.

**1.7** *''ஒருமுகப்படுத்தல் என்பது ஹென்றி பயோல் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு முகாமைத்துவக் கோட்பாடு ஆகும்''* என்னும் கூற்று பிழையானது என குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் தவறான விடையினை அளித்திருந்தனர். பரீட்சார்த்திகள், ஒருமுகப்படுத்தல் என்பது ஹென்றி பயோல் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு முகாமைத்துவக் கோட்பாடு என்பதை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதி ஒவ்வொரு வினாவுக்கும் 5 புள்ளிகள் வீதம் மொத்தமாக 25 புள்ளிகளுக்காக ஐந்து வினாக்களைக் கொண்டிருந்தது.

### வினா இல. 02

இங்கு, முகாமையாளர்களால் பல்வேறு முகாமைத்துவ மட்டங்களிலும் விருத்திசெய்யப்பட வேண்டிய முகாமைத்துவத் திறன்கள் மூன்றினை (03) விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. விருத்தி செய்யப்பட வேண்டிய மூன்று (03) திறன்களை ஒவ்வொன்றாக எழுதி விபரித்திருப்பின் முழுப் புள்ளிகளையும் பெற்றிருக்க முடியும். எவ்வாறாயினும், முகாமைத்துவத் திறன்கள் சரியானவாறு அடையாளங் காணப்பட்டிருக்கவில்லை என்பதுடன் சில பரீட்சார்த்திகள் தமது உள்ளடக்கங்களை விபரித்திருந்தனர். வேறு சிலர் வெறுமனே மூன்று முகாமைத்துவத் திறன்களையும் எழுதியிருந்த போதிலும் அவர்கள் அவற்றினை விபரித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் முகாமைத்துவத் திறன்கள் மூன்றைப் பெயரிட்டு, அவற்றை திருப்திகரமான முறையில் விபரித்திருந்ததுடன் வரைபடங்களையும்கூடச் சமர்ப்பித்து முறையாகவும் விடையளித்திருந்தனர். வினாவில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக்கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும். பல்வேறு முகாமைத்துவ மட்டங்களிலும் முகாமையாளர்களால் விருத்தி செய்யப்பட வேண்டிய முகாமைத்துவத் திறன்களாக தொழில்நுட்பத் திறன்கள், மானிடத் திறன்கள் மற்றும் எண்ணக்கரு சார்ந்த திறன்கள் என்பன காணப்படுகின்றன.

### வினா இல. 03

இவ்வினா நோக்கம் ஒன்றின் 5 பண்பியல்புகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. வினாவில் என்ன எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்பதைச் சரியாக விளங்கிக்கொண்ட பரீட்சார்த்திகள் நோக்கம் ஒன்றின் 5 பண்பியல்புகளைக் குறிப்பிட்டு முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இங்கு 5 பண்பியல்புகளையும் வெறுமனே குறிப்பிடுமாறு மாத்திரமே கேட்கப்பட்டிருந்ததாயினும் விபரமான விபரிப்புகளுடன்கூடிய நீண்ட விடைகள் எழுதப்பட்டிருந்த சந்தர்ப்பங்களையும் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் ஏனைய வினாக்களுக்கான புள்ளிகளைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படக்கூடிய நேரத்தைச் சம்பந்தமற்ற விடயங்களை எழுதுவதற்குப் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்களையும் காணக் கூடியதாக இருந்தது.

### வினா இல. 04

இங்கு அதிகாரக் கையளிப்பின் மூன்று (03) அனுகூலங்களை விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. அதிகாரக் கையளிப்பானது எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விபரிப்பதன் ஊடாக அதன் அனுகூலங்கள் மூன்றினை எழுதியிருப்பின் முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கான சாத்தியக்கூறு இருந்திருக்கும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை எழுதியிருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சிலர் விபரித்தல் இன்றி வெறுமனே விடயங்களை மாத்திரம் எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் முகாமைத்துவ எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு கையளிப்பு பற்றிய பொதுவான எண்ணங்கள் மீது கவனத்தைச் செலுத்தி விடையளித்திருந்ததுடன் வினாவுக்கு சம்பந்தமற்ற நீண்ட விடயங்களையும் அதில் சேர்த்திருந்தனர். பயனுறுதிமிக்க முகாமைத்துவம், ஊழியர்களை மேம்படுத்தல், ஊழியர்களை ஊக்குவித்தல், வளர்ச்சிக்கான வசதிகளை ஏற்படுத்தல், முகாமைத்துவப் படிமுறைகளுக்கான அடிப்படையை அமைப்பதற்கான ஆற்றல் மற்றும் சிறந்த ஒருங்கிணைப்பு போன்ற விடயங்கள் அதிகாரக் கையளிப்பின் அனுகூலங்களாக எழுதப்பட்டிருந்தன.

### வினா இல. 05

இவ்வினாவில் பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஒன்றிற்காக பொருத்தமானதொரு ஊடகத்தைத் தெரிவுசெய்வதில் கவனம் செலுத்த வேண்டிய காரணிகள் ஐந்தினை (05) அடையாளங் காணுமாறு கேட்கப்பட்டிருந்தது. இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கு பயனுறுதிமிக்க தொடர்பாடல் என்றால் என்ன, பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஒன்றிற்காக பொருத்தமானதொரு ஊடகத்தைத் தெரிவுசெய்வதில் கவனம் செலுத்த வேண்டிய 5 விடயங்களை அடையாளங் காணல் என்பவை போதுமானதாக இருக்கும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஊடகம் ஒன்றைத் தெரிவுசெய்வதில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களை எழுதி முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் தொடர்பாடல் பற்றிய சரியான புரிதலின்றி தேவையற்ற விடயங்களை எழுதியிருந்தனர்.

பயனுறுதிமிக்க தொடர்பாடலுக்காக ஊடகம் ஒன்றைத் தெரிவுசெய்வதில் கவனம் செலுத்த வேண்டிய 5 விடயங்களை எழுதுவதற்குப் பதிலாக தொடர்பாடலின் அனுகூலங்கள், தொடர்பாடலின் பண்புகள் போன்றவற்றை விடைகளாக எழுதியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இங்கு நீண்ட விபரிப்புகளுக்கு நேரத்தை ஒதுக்குவது தேவையற்றதாக இருக்கும். பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஒன்றிற்காக பொருத்தமானதொரு ஊடகத்தைத் தெரிவுசெய்வதில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களாக செலவு, வேகம், துல்லியத்தன்மை, செய்தியின் தன்மை, பெறுபவரின் தன்மை, பணியின் அளவு மற்றும் பின்னூட்டத்தின் முக்கியத்துவம் போன்றவற்றை குறிப்பிட முடியும்.

### வினா இல. 06

இவ்வினா கலாசார வலையின் கூறுகளிலிருந்து *“நிறுவனக் கட்டமைப்பு”* மற்றும் *“கதைகள்”* ஆகிய கூறுகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் மாத்திரமே இவ்வினாவுக்கு திருப்திகரமான விடைகளை எழுதக்கூடியதாக இருந்ததை விடைத் தாள்களை மதிப்பீடு செய்தபோது காணக்கூடியதாக இருந்தது. நிறுவனக் கட்டமைப்பு என்பது முகாமைத்துவக் கற்கையில் மிகவும் இலகுவாக அடையாளங் காணக்கூடியதும் இலகுவாக விபரிக்கக்கூடியதுமான ஓர் கூறாக இருந்த போதிலும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், நிறுவனக் கட்டமைப்பு வரைபடங்களுடன் கூடிய சிறந்த விடைகளைப் பரீட்சார்த்திகள் சமர்ப்பித்திருந்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான முறையில் விடயங்களை விபரித்திருக்காத காரணத்தால் “கதைகள்” இற்காக குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கதைகள் என்பது முன்னர் நிகழ்ந்த நிகழ்வுகள் என்பதுடன் அது நிறுவனத்தின் உள் மற்றும் வெளிப் பக்கங்கள் பற்றி மக்களால் பேசப்படுகின்ற ஒன்றாகும்.

## பகுதி C

### வினா இல. 07

இவ்வினா **பகுதிகள் (a), (b)** என இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

**பகுதி (a)** ஆனது பாரம்பரிய (மேற்கத்தைய) முகாமைத்துவப் பாணிக்கும் யப்பானிய முகாமைத்துவப் பாணிக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. இரண்டு பாணிகள் பற்றியும் அறிவைக் கொண்டிருந்த பரீட்சார்த்திகள் ஒன்றுடனொன்று ஒப்பிட்டு இரு வேறுபாடுகளை எழுதி புள்ளிகளைப் பெற்றிருந்த அதே நேரம் அத்தகைய விளக்கமின்றி இருந்த வேறு சிலர் சம்பந்தமற்ற வேறுபாடுகளை எழுதியிருந்ததால் எந்தவொரு புள்ளிகளைப் பெறவில்லை. இரு பாணிகளுக்குமிடையிலான வேறுபாடுகளை எழுதுவதற்குப் பதிலாக அவ்விரு பாணிகள் பற்றியும் தனித்தனியாக விபரித்திருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

**பகுதி (b)** ஆனது வினாவில் கூறப்பட்ட கம்பனியான **மல்தெனிய இன்டஸ்ரீஸ்** முகங்கொடுக்கக்கூடிய சமகால முகாமைத்துவச் சவால்கள் மூன்றினை விபரிக்குமாறு கேட்டிருந்தது. கம்பனி எதிர்கொள்கின்ற மூன்று முகாமைத்துவச் சவால்களை எழுதி, அவற்றை விபரிப்பதன் மூலம்

புள்ளிகளைப் பெறுவதற்கான சாத்தியக்கூறு காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் உரிய முறையில் திருப்திகரமான விடைகளை எழுதியிருந்ததுடன் குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் வெறுமனே விபரிப்புகளின்றிச் சவால்களைப் பெரிட்டிருந்தனர். மொத்தத்தில், இவ்வினாவுக்கு விடையளித்திருந்த பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. உலகமயமாதல், பொருளுக்கான கேள்வியும் உயர் தரச் சேவைகளும், பன்முக வேலைப்படையின் அதிகரிப்பும் வேறுபட்ட கலாசாரங்களும் மற்றும் தொழில்நுட்பவியலின் தொடர்ச்சியான மாற்றங்கள் என்பவை சமகால முகாமைத்துவச் சவால்களாக எழுதப்படக்கூடியவை ஆகும்.

## வினா இல. 08

இவ்வினா இரு (02) பகுதிகளைக் கொண்டதாகும்.

**பகுதி (a)** ஆனது நிறுவனம் ஒன்றிற்கு தந்திரோபாயத்தின் முக்கியத்துவத்தை ஆராயுமாறு கேட்டிருந்தது. வேறுபட்ட அம்சங்கள் மீதான தருக்க ரீதியான விடயங்களைச் சமர்ப்பித்ததன் பின்னர் தந்திரோபாயத்தின் முக்கியத்துவத்தை ஆராயும்போது தந்திரோபாயத்தின் முக்கியத்து வமானது கருத்தூன்றித் தெரியக்கூடியதாக இருக்கும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவைச் சரியாக விளங்கிக்கொண்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடயங்களை எழுதி, வேறுபட்ட முகாமைத்துவ எண்ணக்கருக்கள் பற்றி விபரித்திருந்ததுடன் மிகக் குறைந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியாகவும் கவனமாகவும் விடைகளைச் சமர்ப்பித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**பகுதி (b)** ஆனது தந்திரோபாய மாற்றுத் தெரிவினை உருவாக்குவதில் அன்சொப் கட்டமைப்பில் உள்ளடங்கியுள்ள (i) பொருள் மேம்பாடு மற்றும் (ii) பன்முகப்படுத்தல் ஆகிய இரு தந்திரோபாய மாற்றீடுகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இப்பகுதிக்கு அளிக்கப்பட்டிருந்த சில விடைகள் திருப்திகரமான மட்டத்தில் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. இது, சில பரீட்சார்த்திகள் பரீட்சைக்காக முன்னாயத்தங்களைச் செயத்திருக்கவில்லை என்பதையே தெளிவாகக் காட்டுகிறது. சில பரீட்சார்த்திகள் ஓரளவு திருப்திகரமான விடைகளை எழுதியிருந்தனர். சிலர் குறித்த பதங்களை விபரிக்காது விடைகளை எழுதியிருந்தனர். முழுப் புள்ளிகளையும் பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாக இருந்தது. ‘‘பொருள் மேம்பாடு’’ என்பது தற்போதுள்ள வாடிக்கையாளர்களுக்கு புதிய பொருள் ஒன்றினை விருத்தி செய்யும் செயன்முறை என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

## வினா இல. 09

இவ்வினா இரண்டு (02) பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**பகுதி (a)** ஆனது வெற்றிகரமான மாற்றம் ஒன்றிற்கான காரணிகள் மூன்றினை (03) விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு விடையளித்திருக்கவில்லை. விடையளிக்காமைக்கான காரணம், வினாவை விளங்கிக்கொண்டிராமையாக இருக்கலாம் அல்லது இப்பாடத்தைக் கற்காமல் இருந்திருக்கலாம் அல்லது ‘‘காரணிகள்’’ என்பதற்கான அர்த்தம் தெரியாமல் இருந்திருக்கலாம். மிகக் குறைந்த அளவு பரீட்சார்த்திகளே முகாமைத்துவ வெற்றிக்கு மாற்றம் அவசியமானது எனவும் அதற்கான காரணிகளையும் எழுதி முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். வெற்றிகரமான மாற்றம் ஒன்றிற்கான மூன்று காரணிகளாக மாற்றமொன்றிற்கான தேவை, இசைவாக்கம் மற்றும் வளங்கள் என்பவை காணப்படுகின்றன என்பதைப் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ள வேண்டும். இங்கு சம்பந்தப்பட்ட கோட்பாடுகளைத் தெளிவாக அறிந்திருப்பதும் அவற்றைச் சரியானவாறு விபரிப்பதும் முற்றிலும் அவசியமானதாகும்.

**பகுதி (b) (i)** இங்கு நிறுவனமொன்றின் இரண்டு உள்ளக நாட்டதாரர்களை அடையாளம் காணுமாறு கேட்கப்பட்டிருந்தது.

**(ii)** இங்கு, நிறுவனச் செயற்பாடுகளில் அவர்களின் செல்வாக்கினை விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமாக விடையளித்திருந்தனர். பங்குதாரர்கள் / உரிமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் உள்ளக நாட்டதாரர் களாகக் கருதப்படக்கூடியவர்கள் என்பதைப் பரீட்சார்த்திகள் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

## <u>பகுதி D</u>

**வினா இல. 10**

இது விவரணமொன்றை அடிப்படையாகக் கொண்ட விடய ஆய்வு வினாவாகும். இங்கு தரப்பட்ட விவரணத்திலுள்ள நிகழ்வுகளுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியான அறிவைப் பயன்படுத்தும் முறையினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா தயாரிக்கப்பட்டிருந்தது. இவ்வினா **பகுதிகள் (a), (b), (c)** என மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**<u>பகுதி (a)</u>**

இப்பகுதி **திரு. பிரியந்த, திரு. ஒஸ்ரின்** ஆகியோரின் தலைமைத்துவப் பாணிகளை ஆராயுமாறு கேட்டிருந்தது. விடய ஆய்வினை முழுமையாக வாசித்து அவர்கள் இருவரினதும் தலைமைத்துவப் பாத்திரங்களின் செயற்பாடுகளின் பல்வேறு அம்சங்களையும் பரீட்சித்துப் பார்த்ததன் பின்னர் அவர்கள் ஒவ்வொருவரினதும் தலைமைத்துவப் பாணி அடையாளங் காணப்படல் வேண்டும். குறிப்பிட்டளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் ஏகாதிபத்திய தலைமைத்துவம், சனநாயகத் தலைமைத்துவம் போன்ற சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர். எவ்வாறாயினும், குறைந்த அளவிலான பரீட்சார்த்திகள் மாத்திரம் **திரு. பிரியயந்த** அவர்கள் நிலைமாறு (transformational) தலைமைத்துவப் பாணியைப் பின்பற்றுகின்ற அதே வேளை **திரு. ஒஸ்ரின்** அவர்கள் நடவடிக்கை சார் (transactional) தலைமைத்துவப் பாணியைப் பின்பற்றுகிறார் எனச் சரியாக அடையாளங் கண்டிருந்தனர். இரு நபர்கள் இரு வகையான தலைமைத்துவப் பாணிகளைப் பின்பற்றுவது இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். எனவே, விவரணத்துடன் தொடர்புடைய ஒவ்வொருவரினது தலைமைத்துவப் பாணியும் சரியாக அடையாளங் காணப்படல் வேண்டும்.

இங்கு பரீட்சார்த்திகள் பல்வேறு வகையான தலைமைத்துவப் பாணிகளை எழுதியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. எவ்வாறாயினும், வினாவின் இப்பகுதிக்காகப் பெறப்பட்ட புள்ளிகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

**<u>பகுதி (b)</u>**

ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு கம்பனியால் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஊக்கப்படுத்தல் கோட்பாடுகள் இரண்டினை (02) விபரிக்குமாறு இங்கு கோரப்பட்டது. விடய ஆய்வைக் கவனமாக வாசித்து, விளங்கிக்கொண்டு இரண்டு ஊக்கப்படுத்தல் கோட்பாடுகளை விபரிப்பதே இங்கு செய்ய வேண்டியதாகும். இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகள் 12 ஆகும். வினாக்களுக்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் புள்ளிகளைக் கவனத்திற் கொள்வது முக்கியமானதாகும். மேலும், ஊக்கப்படுத்தல் கோட்பாடுகளை விபரிக்கும்போது, விபரணத்துடன் தொடர்புபட்டதாக, பொருத்தமான வகையில் அதனை மேற்கொள்ளுதல் அவசியமானதாகும். வினாவுக்கு விடையளிக்கும்போது, தேவைப் படிநிலைக் கோட்பாடு, இரு காரணிக் கோட்பாடு, ERG கோட்பாடு, McClelland’s கொள்வனவுத் தேவைக் கோட்பாடு, போன்ற கோட்பாடுகள் பின்பற்றப்படக் கூடியதாகும்.

**<u>பகுதி (c)</u>**

கம்பனியின் செயற்பாடுகளுக்கு நிறுவனக் கலாசாரம் ஏன் முக்கியமானது என்பதை விபரிக்குமாறு இங்கு கோரப்பட்டது. நிறுவன கலாசாரம் பற்றிய சரியான புரிதலின் ஊடாக நிறுவன கலாசாரம் என்றால் என்ன என்பதை விபரிப்பதுடன் அது தரப்பட்ட கம்பனிக்கு எவ்வாறு முக்கியமானதாக மாறுகிறது என்பதைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். மொத்தமாகப் பார்க்கும்போது இப்பகுதிக்கு பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகள் திருப்திகரமான மட்டத்தில் இருந்ததுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளைப் பெறக்கூடியதாகவும் இருந்தாது. நிறுவனம் ஒன்றிலுள்ள ஒற்றுமை, விசுவாசம், போட்டி, வழிப்படுத்தல் மற்றும் அடையாளங் காணல் போன்ற நிறுவன கலாசாரம் மிகவும் முக்கியமானது என்பதைப் பரீட்சார்த்திகள் விள்ங்கிக்கொள்ள வேண்டும்.

- - -

## <u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கருத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:

1. பாடத்திட்டத்தை நன்றாகக் கற்கவும்.
2. வினாப்பத்திரத்தைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். (இந்நோக்கத்திற்காக கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.)
3. பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் கவனமாக வாசித்து, அதில் என்ன வினவப்பட்டுள்ளது என்பதை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடை எதிர்பார்க்கப்படும் வேளையில், தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுது வதைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.
4. பரீட்சை நேரத்தை வினைத்திறன்மிக்கதாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
5. விடைப் புத்தகத்தினை ஒப்படைப்பதற்கு முன், வினா இலக்கங்கள், உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.
6. ‘‘செயல் வினைச்சொல் பட்டியல்’’ ஒன்று வினாப்பத்திரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த அட்டவணையில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் விடைகள் எழுதப்படல் வேண்டும்.
7. கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
8. சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பது விரும்பத்தக்கது.
9. உங்கள் அறிவை மேம்படுத்திக் கொள்வதன் பொருட்டு கடந்தகால வினாப்பத்திரங் களுக்கு விடையளித்துப் பழகிக்கொள்ளுங்கள்.
10. நல்ல முன்னாயத்தத்துடனும் சித்தியடைகின்ற உறுதியானதொரு உறுதிப்பாட்டுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும

- * * * -